# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1502/10 - 2007 ජූනි 20 වැනි බදාදා - 2007.06.20

1502/10 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணச் சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கும் வகையில் 2007 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு,
2007, யூன் 18.

**ஒழுங்கு விதிகள்**

1. 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் தொடர்பான ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட்டு 2006 மே 30 ஆந் திகதிய 1447/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டவை இத்தால் நீக்கப்படுவதுடன், இதற்கு முன்னர் அதன்படி இடம்பெற்றவற்றில் மாற்றங்கள் எதுவும் ஏற்படமாட்டாது.

2. (1) ஒழுங்குவிதி 03 இன் ஏதேனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வியாபாரம் அல்லது வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஆள் ஒருவர் அல்லது பங்குடமையொன்று 2007 ஏப்பிறல் 1 ஆந் திகதி அல்லது அதன்பின்னர் ஏதேனும் தொடர்புடைய காலாண்டிற்கு, அவர் பின்வருவனவற்றை தெரிவு செய்யலாம்.

(i) அப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அத்தகைய வியாபாரம் அல்லது வர்த்தகத்திலிருந்தான குறிப்பிட்ட காலாண்டுக்கான விற்பனைப் புரள்வினை கணித்தல்.

(ii) மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உப பிரிவின் (அதில் உள்ள விதிவிலக்குகள் தவிர) ஏற்பாடுகளை கவனத்திற் கொள்ளத்தேவையில்லை.

(iii) அவ்வாறு கணிப்பிடப்பட்ட விற்பனைப் புரள்வுக்கான பொருளாதார சேவைக் கட்டணத்தை மேற்குறிப்பிட்ட சட்டத்திற்காக அட்டவணையின் 12 ஆம் விடயத்தில் குறிப்பிடப்பட்ட வீதத்தில் கணிப்பிடவும்.

2. 2 அவ்வாறு தெரிவு செய்த ஆள் ஒருவர் அல்லது பங்குடமையொன்று அனைத்து நோக்கங்களுக்காகவும் மேற்குறித்த சட்டத்தின் அட்டவணைக்கு ஏற்ப இணங்கி ஒழுகியதாகக் கருதப்படுவார்.

3. மேற்குறித்த சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உபபிரிவின் (ஆ) பந்திக்கு அமைவாக இணைந்த வகையில் ஏதேனும் கப்பல் சரக்கேற்றுநரின் வியாபாரம் அல்லது வர்த்தகம் தொடர்பில் தீர்மானிக்கப்பட்டவாறான ஏதேனும் தொடர்புடைய காலாண்டொன்றிற்கான விற்பனை புரள்வானது, அத்தகைய கப்பல் சரக்கேற்றுநர் ஒருவரினால் பொருள் எடுத்துச் செல்வதற்காக, அவரினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட அல்லது அவருக்கு சொந்தமான கப்பலில் அல்லது விமானத்தில் ஏற்றப்படும் ஏதேனும் பொருட்களுக்கு அவரால் குறித்த காலாண்டிற்கு செலுத்தப்படவேண்டிய தொகையினால் குறைக்கப்படலாம்.

4. வியாபாரம் அல்லது வர்த்தகம் தொடர்பான ஏதேனும் காலாண்டிற்கான வியாபாரப்புரள்வானது,

(i) இறக்குமதி செய்யப்பட்ட பட்டை தீட்டப்படாத வைரக்கற்களை வெட்டி பட்டை தீட்டி அதனை நடாத்தும் ஏற்றுமதி செய்யப்படும் பொழுது ஆள் ஒருவரினால் அல்லது பங்குடமையொன்றினால் அக்காலாண்டுக்கான பதனிடப்படாத அத்தகைய மூலப்பொருள் வைரத்தின் சீஜஎவ் (CIF) பெறுமதி மீதான அத்தகைய ஏற்றுமதியின் எவ்ஓபி (FOB) பெறுமதியின் மேலதிகமாக உள்ள தொகையாகும்.

(ii) என்எப்இ (NFE) அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதி, அத்தகைய வியாபாரம் ஆள் ஒருவரினால் அல்லது பங்குடமையினால் மேற்கொள்ளப்படுமிடத்து அக்காலாண்டிற்கான அத்தகைய மூலப்பொருட்களின் சீஜஎப் (CIF) பெறுமதியிலும் பார்க்க அப்பொருட்களின் ஏற்றுமதிகளின் எவ்ஓபி (FOB) பெறுமதியிலும் மேலாக உள்ள தொகையாகும்.

- பிணையங்களினை கொள்வனவு செய்வதில் காலாண்டின் போது முதலீடு செய்த தொகை, மற்றும்

- குறித்த காலாண்டின் போது இடம்பெற்ற ஏதேனும் மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான அத்தகைய ஆரம்ப விநியோகத்தரினால் அனுமதிக்கப்பட்ட கழிவு அல்லது செலுத்தப்பட்ட வட்டி,

என்பவற்றின் கூட்டுத்தொகைக்கு மேலாக உள்ள அத்தகையஆரம்ப விநியோகத்தரினால் வைத்துக்கொள்ளப்பட்ட பிணையங்களின் விற்பனை மூலம் பெறப்பட்ட தொகை.

மேற்கூறிய சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவிலுள்ள வியாபாரப் புரள்விற்கான வரைவிலக்கணத்தில் பந்தி (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுகள் மற்றும் சேர்த்தல்கள் உரிய கவனத்துடனும் அறிவுடனும் மேற்கொள்ளப்படும்.

5. இந்த ஒழுங்குவிதிகளில்,

(i) "கப்பல் சரக்கேற்றுநர்" என்பது, கப்பல் சரக்கேற்றுநர் ஒருவராக செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்து கொண்ட ஆள் ஒருவர் அல்லது பங்குடமை ஒன்று எனப்பொருள்படுவதுடன் அவர் -

- "அனைத்து அபாய மற்றும சட்ட பொறுப்புடமை காப்புறுதிப் பத்திரம்" ஒன்றினை கப்பல் சரக்கேற்றுநர் ஒருவரினால் பொருட்கள் மீது உட்படுத்துவதற்கான பல்- மாதிரி ஆவணங்களை விநியோகிப்பவராகவும், அத்துடன்

- ஏதேனும் காலாண்டிற்காக தொடர்புடைய வியாபாரப் புரள்விற்கான உரிய விபரத்திரட்டுடன் 3 ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறான படிவத்தில் தயாரிக்கப்பட்ட குறித்த வியாபாரப் புரள்வினை குறித்த காலாண்டின் ஒவ்வொரு மாதத்திற்கும் செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்குச் சமர்ப்பித்த அறிக்கைகளின் பிரதிகளையும் இணைத்து, அத்துடன் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 29 ஆ பிரிவின் கீழ் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட அறிவித்தலின் நான்கு, ஐந்து மற்றும் ஆறாம் அட்டவணைகளில் குறிப்பீடு செய்யப்பட்ட படிவத்தில் தயாரிக்கப்பட்ட தேறிய சேகரிப்புக்களையும் இணைத்து சமர்ப்பிப்பவர்,

(ii) “ஆள்” என்பது- 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் முதலீட்டுச் சபையுடன் செய்து கொண்ட எவரேனும் ஆள் ஒருவரை உள்ளடக்கும்.

(iii) “ஆரம்ப விநியோகத்தர்” என்பது- 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 217 ஆம் பிரிவின் பொருளை ஒத்ததாக இருக்கும்.

(iv) “பிணையம்” என்பது-

(அ) பதிவு செய்யப்பட்ட பங்கு மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 420) கீழ் விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகள் அல்லது பிணையம் ஆகும்.

(ஆ) உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 417) கீழ் விநியோகிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள், அல்லது

(இ) நாணயச் சட்டத்தின் (அத்தியாயம் 422) 134 ஆம் பிரிவின் கீழ் விநியோகிக்கப்பட்ட மத்திய வங்கி பிணையங்கள்.

6- 58

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.